ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 6.8 – மான் கொண்ட

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமானுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 6.8 – மான் கொண்ட

‡ மான் கொண்ட தோல் ⋆
மார்வின் மாணி ஆய் ⋆
மாவலி மண் தான் கொண்டு ⋆
தாளால் அளந்த பெருமானை ⋆
தேன் கொண்ட சாரல் ⋆
திருவேங்கடத்தானை ⋆
நான் சென்று நாடி ⋆
நறையூரில் கண்டேனே ‖ **6.8.1** ‖

முந்நீரை முன் நாள் ⋆
கடைந்தானை ⋆
மூழ்த்த நாள் அந்நீரை மீனாய் ⋆
அமைத்த பெருமானை ⋆
தென்னாலி மேய ⋆
திருமாலை எம்மானை ⋆
நன்னீர் வயல் சூழ் ⋆
நறையூரில் கண்டேனே ‖ **6.8.2** ‖

தூ வாய புள் ஊர்ந்து வந்து ⋆
துறை வேழம் ⋆
மூவாமை நல்கி ⋆
முதலை துணித்தானை ⋆
தேவாதி தேவனைச் ⋆

செங்கமலக் கண்ணானை ⋆
நாவா உளானை ⋆
நறையூரில் கண்டேனே ॥ **6.8.3** ॥

ஓடா அரியாய் ⋆
இரணியனை ஊன் இடந்த ⋆
சேடார் பொழில் சூழ் ⋆
திருநீர் மலையானை ⋆
வாடா மலர்த் துழாய் ⋆
மாலை முடியானை ⋆
நாள் தோறும் நாடி ⋆
நறையூரில் கண்டேனே ॥ **6.8.4** ॥

கல் ஆர் மதில் சூழ் ⋆
கடி இலங்கைக் கார் அரக்கன் ⋆
வல் ஆகம் கீள ⋆
வரி வெஞ்சரம் துரந்த வில்லானை ⋆
செல்வ விபீடணற்கு ⋆
வேறாக ⋆
நல்லானை நாடி ⋆
நறையூரில் கண்டேனே ॥ **6.8.5** ॥

உம்பர் உலகோடு ⋆
உயிர் எல்லாம் ⋆
உந்தியில் வம்பு மலர் மேல் ⋆
படைத்தானை மாயோனை ⋆
அம்பன்ன கண்ணாள் ⋆
அசோதை தன் சிங்கத்தை ⋆

நம்பனை நாடி ⋆
நறையூரில் கண்டேனே ॥ **6.8.6** ॥

கட்டேறு நீள் சோலைக் ⋆
காண்டவத்தைத் தீ மூட்டி விட்டானை ⋆
மெய்யம் அமர்ந்த பெருமானை ⋆
மட்டேறு கற்பகத்தை ⋆
மாதர்க்காய் ⋆
வண் துவரை நட்டானை நாடி ⋆
நறையூரில் கண்டேனே ॥ **6.8.7** ॥

மண்ணின் மீ பாரம் கெடுப்பான் ⋆
மற மன்னர் ⋆
பண்ணின் மேல் வந்த ⋆
படை எல்லாம் பாரதத்து ⋆
விண்ணின் மீதேற ⋆
விசயன் தேர் ஊர்ந்தானை ⋆
நண்ணி நான் நாடி ⋆
நறையூரில் கண்டேனே ॥ **6.8.8** ॥

‡ பொங்கேறு நீள் சோதிப் ⋆
பொன் ஆழி தன்னோடும் ⋆
சங்கேறு கோலத் ⋆
தடக் கைப் பெருமானை ⋆
கொங்கேறு சோலைக் ⋆
குடந்தைக் கிடந்தானை ⋆
நங்கோனை நாடி ⋆
நறையூரில் கண்டேனே ॥ **6.8.9** ॥

‡ மன்னு மதுரை ⋆
வசுதேவர் வாழ் முதலை ⋆
நன்னறையூர் ⋆
நின்ற நம்பியை ⋆
வம்பவிழ் தார்க் கன்னவிலும் தோளான் ⋆
கலியன் ஒலி வல்லார் ⋆
பொன் உலகில் வானவர்க்குப் ⋆
புத்தேளிர் ஆகுவரே ॥ **6.8.10** ॥

அடிவரவு — மான் முந்நீரை தூவாய ஓடா கல்லார் உம்பர் கட்டேறு மண்ணின் பொங்கு மன்னு பெடை

மான் கொண்ட முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்